420

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

37

வாலியம் 12] 1918௵ அக்டோபர், நவம்பர், டிசம்பர் [நெ. 10, 11 & 12

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

(சென்ற செப்டம்பர்மாதத்திய 64-வது பக்கம் தொடர்ச்சி.)

1. மண் அனுப்புகிறவர் பெயரும் விலாசமும்.

2. மண் எடுத்த நிலம் எங்கேயிருக்கிறது-ஜில்லா-தாலூகா-கிராமம்.

3. நிலத்தின் சர்வே நெம்பர்.

4. நிலம் நஞ்சயா (ஒருபோகமா இருபோகமா) புஞ்சையா, தோட்டக்காலா?

5. சாதாரணமாய் என்ன பயிர் சாகுபடி செய்வது?

6. ஜலவசதியின் விபரம்.

7. வடிகால் வசதியுண்டா.

8. இதற்கு முன் எருபோட்டிருக்கிறதா? என்ன எரு? எவ்வளவு காலமாய்?

9 அனுப்புகிறவர் அனுபோகப்படி நிலத்தில் என்ன கெடுதியிருக்கிறது?

ஒருவர் அநேகம் மாதிரி மண்கள் ஒரே தடவையில் அனுப்பினால் வழியில் கலந்து போகாமலிருக்கும்படி ஜாக்கிருதையாய் பார்சல்பண்ணி அனுப்பவேண்டியது முக்கியம்.

எம். ஆர். ராமஸ்வாமி சிவன்,
கவர்ன்மெண்டு ஆக்டிங் அக்ரிகல்சரல்-கெமிஸ்டு,
கோயம்புத்தூர்.

கோயமுத்தூர் ஜில்லாவில் கரும்புபயிருக்கு பசுந்தாள் எருவாக சணல் தக்கைபூண்டு இவைகளின் உபயோகம்.

கரும்பு பயிர் கனமான எருவிடலுக்கு தகுந்தபடி பலன்கொடுக்கக் கூடியதாயிருப்பதால் கோயமுத்தூர் ஜில்லாவில் கரும்பு சாகுபடியில் எருவிடல் என்ற விஷயம் வெகு முக்கியமானது. இந்தப் பயிருக்கு பசுந்தழைகளை உபயோகித்தல் இந்த ஜில்லாவில் ஒரு சாதாரண வழக்கம். கரும்பு பயிர் 3, 4 மாதமாயிருக்கும்போது மேல் எருவாக சாதாரணமாய் இந்த தழை எரு உபயோகப்படுகிறது. இந்த ஜில்லாவில் இந்த பயிர் இரண்டு பிரத்தியேகப்பட்டங்களில் சாகுபடி செய்யப்படு

கிறது. மாசிப்பட்டமும் (பிப்ரவரி-மார்ச்சு) ஆடிப்பட்டமும் (ஜூலை-ஆகஸ்டு) முன்சொன்ன பட்டம் கிணற்றிறவைகளின் கீழ் சாகுபடி செய்யப்படுகிற கரும்பு பூமிக்கு சாதாரணமாய் சிலாக்கியமாய் எண்ணப்படுகிறது. ஆனாலும் இப்பட்டத்தில் எரிகளின்கீழ் சாகுபடியுள்ள இடங்களும் உண்டு. பின்சொன்ன பட்டம் ஆறுகளின்கீழிலும் ஆற்றினால் நிரம்பப்பட்ட குளங்களின்கீழிலும் உள்ள வயல்களில் சாகுபடியாகிற கரும்புகளுக்கு சாதாரணம். இக்குறிப்பில் முன்சொன்ன பட்டம் அதாவது மாசிப்பட்டம் கரும்பை குறித்து பேசுவோம்.

கோயமுத்தூர் நகரத்திற்கு வடக்கேயுள்ள கிராமங்களிலும் இவைகளைச்சார்ந்த அவனாசி தாலூகா சில கிராமங்களில் மாசிப்பட்டம்தான் வழக்கம். இவைகளில் கரும்பு கிணற்றிறவை உதவியுள்ள எரி பாசனத்திலும் அல்லது தனி கிணற்றிறவை பாசனத்திலும் சாகுபடி செய்யப்படுகிறது. மண் கருமண் மிசரத்திலிருந்து கருமண் களிப்பு வரையில் வித்தியாசபடுவதுடன் செம்மண் மிசரமும் காணப்படுகிறது. இப்பூமிகளில் ஜூன்-ஜூலை மாதங்களில் ராகிப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு செப்டம்பர் மாதத்தில் அறுவடையாகிறது. பூமியை அதின்பின் உழுவார்கள் அல்லது எரியில் சீக்கிரம் ஜலம் வந்தால் மண்வெட்டியால் கொத்துவார்கள். அக்டோபர் மாதத்தில் பசுந்தழைகள் புஞ்சை காடுகளிலிருந்தும் அல்லது மலைகளிலிருந்தும் கொண்டுவரப்படும். உழுத பூமிகளில் ஜலத்தைவிட்டு பசுந்தழைகளை எகர் 1-க்கு 20 வண்டி வீதம் அமிழ்த்துவார்கள். பசுந்தழைகளை அழுகவைக்க 15 நாள் முதல் ஒரு மாதத்திற்கு அதிகப்படாமல் ஜலத்தை கட்டுவார்கள். பூமி சரியானபடி காய்ந்துவரும் சமயத்தில் உழவுசெய்வார்கள். ஜனவரி மாதம் 15 தேதி அதாவது தைமாசம் ஆரம்பம் வரையில் 7 முதல் 10 உழவு உழுவார்கள். சாணி எரு எகர் 1-க்கு 15 முதல் 20 வண்டி வரையில் கொட்டி அதை மூடவும் கரும்பு சாகுபடிக்கு முதல் வேலைகள் தீரவும் ஒரு உழவு கொடுக்கப்படும். மேல் எருவாக இரண்டாவது எரு இந்த பூமிகளுக்கு கொடுபடுவதேகிடையாது. ஆனால் ஆடிபட்டம் கரும்புக்கு இந்த எருவிடல் சாதாரணமென்ற விஷயம் குறிப்பிடவாகும். ஆகையால் தழையின்குணம் நன்றாய் இவர்களுக்கு தெரிந்திருக்கிறது. விவசாய டிபார்ட்மெண்டார் விவசாயிக்கு தேவையான பசுந்தழைகள் சேகரிப்பதில் அதிக கஷ்டமிருப்பதை உணர்ந்து சணலும் தக்கைபூண்டும் பசுந்தாள் எருவாக சாகுபடிசெய்ய ஒருவித ஏற்பாடு செய்தனர். சுமார் 5 வருஷத்திற்குமுன் இந்த பாகத்தில் சணல் விதை முதலில் அக்கிராரசாமகுளம் என்ற கிராமத்தில் சில குடியானவர்களுக்கு இனாமாக கொடுத்ததில் சுலபமாய் உபயோகப்படுத்தக்கூடிய ஒரு நல்ல பயிர் அவர்கள் உற்பத்திசெய்தனர். சணப்பு பயிர் அவர்கள் சேகரித்து உபயோகப்படுத்தும் தழை அளவைக்காட்டிலும் அதிகமாயுள்ள பசுந்தழை கொடுத்தது. ஒருவித பார்வையும் ஜலமுமில்லாமலும் வளர்ந்துவந்தது. மண் கருமண் ஆனதால் பயிரின் வளர்ச்சி இரண்டு மாதத்திற்குள் 8 அடி உயரத்திற்குமேல் வளர்ந்தது. இது இசா குடியானவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. ஆனதால் குடியானவர்கள் அடுத்த பருவத்திற்கு பசுந்தாள் எருவிதைகள் வாங்க அதிக ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். கோயமுத்தூரில் ஒரு பசுந்தாள் எரு

விதை டிப்போ ஒன்று ஏற்படுத்தி அந்த விதைகளை குடியானவர்களுக்கு தேவையான சமயத்தில் விற்கவும் ஏற்பாடுசெய்து டிபார்ட்மெண்டார் தங்களாலான சகாயத்தை குடியானவர்களுக்கு சுலபமாய் விதைகள் கிடைக்கும்படி செய்தார்கள். பின்வந்த வருஷங்களில் தக்கைபூண்டு வழக்கத்துக்கு கொண்டுவரப்பட்டது. இது சணலைப்பார்க்கிலும் உயரமாய் வளர்ந்ததாலும் மண்ணின் தன்மையை சாதாரணமாய் சீர்திருத்தம் செய்ததாலும் குடியானவர்கள் இதை விசேஷமாய் மதித்தார்கள். சில தாழ்ந்த நிலங்களின் வடிகாலை சாதாரணமாயும் சில களர் பூமிகளின் வடிகாலை முக்கியமாயும் இது சாகுபடி செய்ததால் விருத்தியடைய செய்து குடியானவர்கள் இப்பயிரைக்குறித்து திருப்தியடைந்தார்கள். ஏரியின்கீழ் அக்கிராரசாமகுளம் கிராமத்தில் அடுத்த வருஷம் கரும்பு சாகுபடிக்காக உத்தேசித்திருக்கும் பூமிகளில் அநேகமாய் எல்லாம் இச் சணல் தக்கைபூண்டு பசுந்தாள் எருவ பயிர்களால் வருஷா வருஷம் சாகு படி செய்யப்பட்டுவருகிறது. சில குடியானவர்கள் சணல் வெகு விரைவாய் வளர்வதால் அதை சிலாக்கியமாய் மதிக்கிறார்கள். இவ்வழக்கம் மற்ற கிராமங்களிலும் விருத்தியாய்க்கொண்டுவருகிறது.

தன்னுடைய பூமிக்கு எந்த பசுந்தாள் எரு பயிர் தகுந்ததென்று தெரிந்தெடுப்பதில் குடியானவன் தன்னுடைய பூமியின் சுபாவத்தை அனுசரித்து நிச்சயப்படுத்தவேண்டியது. பூமி மணல் சம்பந்தமாயும் சுலபமாய் ஜலம் பாய்ச்சக்கூடியதாயும் பயிர் வளரக்கூடிய காலம் கொஞ்சமாயிருந்தாலும் சணப்பு பயிரிடலாம். பூமி களிப்பாயும் ஜலம் பாய்ச்சல் சுலபமில்லாமலிருந்தால் தக்கைபூண்டு தெரிந்தெடுக்கவேண்டியது. தக்கைபூண்டு அதிக உயரமாயும் எந்த பூமியில் வளரப்படுகிறதோ அந்த பூமிக்கு தேவையானதற்குமேல் அதிக தழைகளை கொடுக்கிறது. களிப்புள்ள பூமிகளிலும் வடிகால்களிலும் களர் பூமிகளிலும் தக்கை பூண்டு நன்றாய் வளரும். சணப்புக்கு நல்ல வடிகாலுள்ள பூமி தேவை. தக்கைபூண்டு அல்லது சணப்பு பசுந்தாள் எரு பயிர் செய்வதினாலுள்ள பிரயோஜனங்கள் அடியில் வருமாறு:—

(1) கஷ்டமில்லாமல் அதிக தழை தேவையானயிடத்தில் கிடைக்கிறது.

(2) ஒரு பசுந்தாள் எரு பயிரை சாகுபடிசெய்ய செலவாகும் தொகை மிகவும் கொஞ்சம். அநேக இடங்களில் அது விதையின் விலைமாத்திரம்தான். சணப்புவிதை ஒரு ஏகருக்கு 10 பட்டணம் படியும் தக்கை பூண்டு 4 பட்டணம் படியும் மாத்திரம்தான்.

(3) தழைகளை சம்பாதிக்க மலைகளுக்கும் அல்லது தருசு பூமிகளுக்கும் வண்டிகளை வெகுதூரம் சாதாரணமாய் கொண்டுபோகும் வழக்கம் நிறுத்தப்படுகிறது. ஏரியில் ஜலம் வந்தவுடன் குடியானவன் பசுந்தாள் எருப்பயிரை உபயோகப்படுத்த மார்க்கமாகிறது. ஆகையால் சரியான பயிரிடும் காலம் தவறுகிறதில்லை. பசுந்தழைகளை சேகரிப்பதில் உண்டாகும் பிரயாசையும் பணச்சிலவும் இவ்விதம் செய்வதில் குடியானவன் தன்னுடையவும் தன்னுடைய வண்டிமாடுகள் காலத்தையும் சிரமத்தையும் வீணாக்குவதில்லை.

(4) பசுந்தாள் எருப்பயிர் சாகுபடி செய்வதினால் களிப்பு நிலங்கள் திறக்கப்பட்டு வடிகால் விருத்தி அடைகிறது. தாழ்ந்த நிலங்களும்

களர் நிலங்களும் முக்கியமாய் விருத்தியடையப்பட்டு அவ்விடங்களில் சிலாக்கியமான பயிர்கள் உற்பத்திசெய்ய ஏதுவாகிறது.

(5) அதிக லாபம் ஒரு பசுந்தாள் எருப்பயிர் சாகுபடி செய்வதால் உண்டாகிறதென்பது அடியில்கண்ட சங்கதிகளால் விளங்கும்.

	ரூ.	அ.	ப.
எக்கர் 1-க்கு 10 பட்டணம் படி சணப்புவிதை 3 அணா வீதம் அல்லது தக்கைபூண்டு விதை 1 பட்டணம் படி 8 அணா வீதம் 4 பட்டணம் படி விலை	2	0	0
பயிரை மிதிக்க கூலி	3	0	0
ஆக மொத்தம் ...	5	0	0
தழை வாங்குவதிலும் மிதிப்பதிலும் செலவு. 20 வண்டி தழை மிகவும் குறைந்த மதிப்பு வண்டி 1-க்கு ரூபா 2-வீதம் தழையின் கிரயம்	40	0	0
வண்டி 1-க்கு 2 அணா வீதம் பூமியில் மிதிக்க... ...	2	8	0
ஆக மொத்தம் ...	42	8	0
ஒரு பசுந்தாள் எரும்பயிர் சாகுபடி செய்வதால் செலவுபோக லாபம் எக்கர் 1-க்கு	37	8	0

(6) இப்பயிர்கள் தென்மேற்கு மழைகாலங்களில் ஒரு புஞ்சை பயிராய் சாகுபடி செய்யப்படுவதால் கருமண் பூமிகளில் சாதாரணமாய் ஜலம் தேவையில்லை. கிணற்று ஜலம் வெகு கடினமான நீடித்த மழையில்லாத காலங்களில் மாத்திரம் உபயோகிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

(7) விதை முதல்தடவை விலைக்கு வாங்கினபிறகு மறுபடி வாங்கவேண்டிய அவசியம் கிடையாது. ஏனெனில் குடியானவன் விதைகளை தன்னுடைய பூமிகளின் வரப்புகளின்பேரிலும் அல்லது புஞ்செய் பயிர்களுடனும் அல்லது கிணற்றுக்கருகில் புள்ச்சை சாகுபடி செய்யும் மாதிரி சொற்ப பூமிகள் சாகுபடிசெய்து தன்னுடைய சொந்த விதையை எப்போதும் ஏற்பாடுசெய்துகொள்ளக்கூடும்.

இவ்வித அநேக உபயோகங்களினால் சிபார்சுபெற்ற இந்த பசுந்தாள் எருப்பயிர் சாகுபடி செய்யும் முறையை இன்னும் அதிகமாய் குடியானவர்கள் கையாளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் ஒரு பசுந்தாள் எருப்பயிர் சாகுபடி செய்வதினாலே மற்ற எருக்களை இக் கரும்பு பயிருக்கு உபயோகப்படுத்தாமல் இருக்கலாம் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளக் கூடாது. ஒரு கரும்பு பயிருக்கு அதிகமான உப்பு வாயுவும் பிரகாசதமில் எருவும் சாம்பல்கார எருவும் தேவை. எல்லா பசுந்தாள் எருப் பயிர்கள் உப்பு வாயுவையும் சொல்ப பிரகாசதமில் சாம்பல்காரம் எருவுகளை கொடுத்தபோதிலும் முக்கியமாய் மண்வயணத்தை சீர்திருத்துவதில் சிலாக்கியமானவை. கரும்பு பயிரின் அதிக பலனை அடைய இவைகளடங்கிய இதர எருக்களை உபயோகப்படுத்தல் வெகு முக்கியம்.

இதைக்குறித்து வேறு விஷயங்கள் விரும்புவோர் அவரவர்களிருக்கப்பட்ட இலாகாவின் விவசாய டிப்டி டைரக்டர் அல்லது அஸிஸ்டாண்டு டைரக்டர் அவர்களுக்கு எழுதும்படி அறிவிக்கப்படுகிறது.

W. சாகவாச்சாரி,
அக்ரிகல்சரல் டிமான்ஸ்ட்ரேடர்,
திருச்சிராப்பள்ளி.

கொழுக்கட்டைப் புல்.

கோயமுத்தூர் புல் என்று சொல்லப்படுகிற கொழுக்கட்டைப்புல், விவசாய டிபார்ட்மெண்டாருக்குத் தெரிந்த புற்களில், மணல் நிலங்களின் மேய்ச்சலை விருத்திசெய்வதற்கு, வெகுசிலாக்கியமானதாகக் காணப்படுகிறது.

மாடுவளர்ப்பதில் பேர்போன காங்கேயநாட்டார் இந்தப் புல்லை ஜாஸ்தியாகவளர்த்து, அம்மாடுகளுக்கு முக்கியதீவனமாக உபயோகிக்கிறார்கள். ஆனால் இப்புல் தெலுங்கு தேசத்தில், புதியதாகக்கொண்டுவந்து பயிரிடப்படுகிற சிலவிடங்களில் தவிர, மற்றவிடங்களில் ஒருவருக்கும் தெரியாதுபோல் தோற்றுகிறது. இப்புல் கம்புவர்க்கத்தைச் சேர்ந்தது, இவைகளின் ஒற்றுமை, இவ்விரண்டின் கதிர்களைப்பார்த்தால் தெரியும்.

கொழுக்கட்டைப் புல், கம்பைப்போல் நன்றாய்க்கிளைப்பதுடன், காய்ச்சல்தாங்கி, மணற்பாங்கான பூமிகளில் நன்றாய்வளரும். இது களிமண் நிலங்களிலும் வளரும். பெல்லாரி ஜில்லா, ஹகரி விவசாயப் பண்ணையில், ஆற்றிலிருந்து அடித்துசேர்க்கப்பட்ட மணல் மேடுகளில் இப்புல் நன்றாய்வளர்ந்திருப்பதை எவரும் பார்க்கலாம். ஆடு மாடு முதலிய கால்நடைகளுக்கு இது வெகுநல்ல தீவனப்பயிர். பயிர் பூமியில் நன்றாய்ப்பிடித்து விட்டால், கடுங்கோடையிலும், அது சாகிறதில்லை. ஆனால், இப்புல்லை எடுத்துவிட்டு வேறு பயிர்செய்யவேணுமென்றால், பூமியை உழுது இலகுவாக, செடிகளை வேருடன் பொருக்கிவிடலாம்.

“கோயமுத்தூரில் மேய்ச்சலுக்குப் புல்வளர்த்தல்” என்ற விஷயத்தைபற்றி, இந்த டிபார்ட்மெண்ட் 27 நெ. (Bulletin) பத்திரிகையில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. அங்கே கம்பு, அல்லது சோளப் பயிரில் பயிருழவு செய்த பிறகு புலவிதையை விதைக்கிறார்கள். தானியப்பயிரை அறுத்தவுடன் இப்புல் நன்றாய்த் தழைத்து பூமியைக் கவர்ந்து பலவருஷங்களுக்கு மேய்ச்சலுக்கு உபயோகப்படுகிறது. புல் விதைத்து மூன்றுவருஷத்திற்ப் பிறகு ஒரு தரமும், பிறகு இப்புல்லை களையும்வரையில், 3 அல்லது 5 வருஷத்திற்கொருதரம் பயிருழவு செய்கிறார்கள்.

ஹகரி விவசாயபண்ணையில், காலமழை ஆரம்பித்தவுடன் ஏகருக்கு 10 15 ராத்தல் விதை விதைத்து, வெறும்மணலில் இப்புல் நன்றாய் வளர்ந்திருக்கிறது. விதைத்தவுடன் ஆட்டுமந்தையை பூமியில் இங்குமங்கும் ஓட அடித்தாவது, அல்லது பூமி சற்று இறுகும்வரையில் கிடைகட்டியாவது வைத்தால், விதை மூடப்படுவதுடன், பயிருக்கு சிறிது உரமும் ஆகிறது. இவ்விதம் செய்தால், விதை ஒருங்கே

முளைத்துவளரும். புரட்டாசி அற்பசி மாதத்தில் புல் பூக்க ஆரம்பிக்கும். முதல் வருஷம் விதை முத்தி உதிர்க்கிறமட்டும் கால் நடைகளை மேயவிடக்கூடாது. பிறகு, உதிர்ந்த விதை மூடுவதற்கு சிறிதுகாலம் மட்டும் மேய்ச்சலுக்கு விடலாம். இரண்டாவது வருஷத்தில், முதல் வருஷம் விதைத்த செடிகள் பூமியில் அடர்த்தியாய் வளர்ந்திருந்தால், புதிய புல் விழுந்த பிறகு சிறிதுகாலம் கால்நடைகளை மேயவிடலாம். இல்லாவிட்டால் மூன்றாவது வருஷம்வரையில் மேய்ச்சலுக்கு உபயோகப்படுத்தக்கூடாது. இப்படி மேய்க்காமலிருந்தால் இரண்டாவது வருஷம் முளைத்த செடிகள் பூமியில் நன்றாய் வேர் ஊன்றி, பிறகு கால் நடைகள் மேய்வதினால கெட்டுப்போகாது. இந்தப் புல்லை ஜாஸ்தியிடத்தில் விருத்திசெய்ய வேண்டினால், விதை விதைப்பதைத் தவிர பழைய செடிகளைத் தோண்டி கிளைகளைப் பிரித்து, பிரித்து நடலாம். இதில் ஒவ்வொரு கிளைக்கும் அதன் சல்லிவேர் இருக்கவேண்டும். செடிகளை சற்று ஆழத்தில் நடவேண்டும். தூறுதல் காலத்தில் இவ்விதம் நட்டால்தான் செடிகள் பிழைக்கும். இதை மறுவருஷம், மழை பெய்து புதுக்கிளை கிளைக்கும்வரையில் மேய்ச்சலுக்கு உபயோகிக்கக் கூடாது.

இப்புல்லின் வளர்த்தியும், புல்கெடாமல் ஏகருக்கு எவ்வளவு கால் நடைகள் மேயவிடலாமென்பதும், பூமி, அவ்விடத்தின் மழை, எரு விட்டால் அதன் குணத்துக்கும் தக்கபடியிருக்கும். Hagari-யில் நல்ல செய் நேர்த்தியில், அதாவது சப்பாத்துக கள்ளியின் பக்கத்தில் நல்ல மழைபெய்த வருஷத்தில், இப்புல் 4, 5 அடிவரையில் வளர்ந்தது, வசதியில்லாத மண்மேட்டின் உச்சியில், மழை கம்மியாயிருந்த வருஷத்தில் $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ அடி உயரம்தான் வளர்ந்தது. அதற்குமேல் வளரவும் முடியாது.

தெலுங்கு நாட்டில், ஹகரி, பெண்ணார் ஆற்றங்கரைகளிலும் பெல்லாரி அனந்தபூர், கடப்பை ஜில்லாக்களில் சுக்கான் கலந்த மணர்ச்சாரிகளிலும். குண்டூர் ஜில்லா புதர் பூமிகளிலும் கோதாவரி. கிருஷ்ணா ஜில்லாக்களில் மேட்டுப்பாங்கான பூமிகளிலும், ஏராளமான மணர் பாங்குகள், பயிர் செய்யப்படாமலாவது, அல்லது இரண்டொரு வருஷம் பயிர்செய்யப்பட்டு. பிறகு வெகுகாலம் தரிசாக விடப்படுகின்றன. அவ்வித நிலங்களில் கொழுக்கட்டைப்புல் இலகுவில்வளரும் இப்புல்லை வளர்த்தால், தானியப் பயிர்செய்கிற பூமிகளில் மணல் பரவாமல் காப்பதுடன் இத்தரிசுகளில் மேய்கிற மாடுகளுக்குப் பூர்த்தியான உணவு கிடைக்கும். சில வருஷம் பயிர்செய்து பிறகு தரிசாகப்போடப்படுகிற நிலங்களிலும் சிறிது லாபம் கிடைக்கும்.

விவசாய டிபார்ட்மெண்டார் இவ்விதையிலிருந்து கொஞ்சம் புல் பயிர்செய்து வருகிறார்கள். வேண்டியவர்களுக்கு சொல்பவிதை கிடைக்கும்.

ஜி. ஆர். இல்சன்,
டிப்டி டைரக்டர் ஆவ் அக்ரிகல்சர், I III சர்க்கில்கள்,
பெல்லாரி.

பசுக்களை எப்போது பொலியவிடக் கொண்டுவரவேண்டும்.

விவசாய டிபார்ட்மெண்டாரும் சில விவசாயகூட்டத்தாரும் சங்கங்களும் தற்காலத்தில் தங்கள் பண்ணைகளில் பொலிகாளைகளை வைத்திருக்கிறார்கள். அநேக கிருஷிகர் பசுக்களை பொலிவதற்கு சரியான காலங்களில் கொண்டுவருவதில்லை யென்று தெரிகிறது. இக்காரணத்தால் எருது பசுவை பொலிகிறதில்லை. அல்லது பொலிந்தாலும் சினை நிற்பதில்லை. இப்படியாவது சரியான பொலிப்பில்லாத பசுக்களைக் கொண்டுவரும் குடியானவர்களுடைய குற்றமே யொழிய பொலிகாளையின் குற்றமாகமாட்டாது. பொலிகாளைகளை மாட்டு மந்தைகளில் சுயேச்சையாய்த் திரியவிடும்போது அந்தந்தபசு பொலிப்பில்வரும்போது காளை பொலிவதால் அதைப்பற்றி கவனிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் விவசாய டிபார்ட்மெண்டாராலும் மற்ற சங்கங்களாலும் தெரிந்தெடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிகாளைகளிடத்தில் கொண்டுபோய் தங்கள் பசுக்களைவிட்டு அதன் மூலியமாய் வர்க்க விருத்தி செய்யவேண்டுமென்று விரும்பும் குடியானவர் சரியானபடி கவனித்து பசுக்கள் சரியானபொலிப்பிலிருக்கும்போது கொண்டுவரவேண்டியது அவசியம். சரியானபொலிப்பின் அடையாளங்கள் பின்னால் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை பசுக்களுக்கும் எருமைகளுக்கும் பொருந்தும்.

சரியான அடையாளங்கள்.

பசுக்களின் பொதுவான அமைதியின்மையே அவைகள் பொலிப்பிலிருக்கின்றன வென்பதற்கு முதல் அடையாளம், அவைகள் கட்டப்பட்டிருந்தால் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு மாறிக்கொண்டும் காதுகளை ஆட்டிக்கொண்டும் தலையை எப்போதைவிட அதிகமாய் உயர்த்திக்கொண்டும் இருப்பதோடு சற்று மிரண்டபார்வையாய் இருப்பதாகவும் தோற்றும். வழக்கத்தைவிட சற்று அதிகமாய்க் கூப்பிடும். வாலை அடிக்கடி ஆட்டிக்கொண்டு வாலின்பக்கம் கொஞ்ச நேரத்திற்கு ஒருதரம் பார்க்கும். இவை மாடு பூரா பொலிப்பிற்கு வருவதற்கு சிலமணிநேரங்களுக்கு முன் தோற்றப்படும் அடையாளங்களெல்லாம், சரியான பொலிப்பில் மாடுவந்தவுடன் மேற்சொன்ன அடையாளங்களெல்லாம் அதிகமாய்க் காணப்படும். மாடுகள் கட்டப்பட்டிருக்கும்போது அடிக்கடி மாமூலாய்க் கத்தும் சத்தத்தைவிட சற்று நீண்டசத்தத்துடன் கத்தும்.

பசுக்கள் சுயேச்சையாய்த் திரியும்போது பசுக்கள் மேயாமலும் ஒருபக்கத்தில் நிற்காமலும் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருப்பதே முதல் அடையாளம். தன் சமீபத்திலுள்ள இதர மாடுகளை தலையால் முட்டிக்கொண்டும் வேறுவிதமாய் ஹிம்சித்துக்கொண்டுமிருக்கும். பூரா பொலிப்பில் வந்தவுடன் மற்ற பசுக்களின்மேல் ஏறுவதுடன் இதரமாடுகளைத் தன்மேலும் ஏறவிடும், மாடுகள் சுயேச்சையாய்த் திரியும்போதும் கட்டப்பட்டிருக்கும்போதும் காணப்படும் அடையாளங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சுயேச்சையாய்த்திரியும்போது இதர பசுக்களின் மேல் ஏறுவதும் இதர பசுக்களைத் தன்மேல் ஏறவிடுவதும் கட்டப்பட்டிருக்கும்போது சத்துவதுமே முக்கியமான அடையாளங்க

ளாய்க் காணப்படுகின்றன. பொலிப்பிலிருக்கும்போது சில பசுக்கள் பால்கொஞ்சம்கூட கொடுக்காமலும் வேறு சில கொஞ்சம் கொஞ்சம் கொடுப்பதும் அடையாளங்களாகும். பசுக்கள் சரியான பொலிப்பு நேரம் அடையும்போது பசுக்களின் அரையிலிருந்து பிசுபிசுப்பும் சுத்தமுமான நீர்வடிகிறது. அநேகமாய் முதல் இது பார்க்கப்படாதபோதிலும் மாடுகள் பொலிப்பில் வந்த சில மணிநேரங்களுக்கப்பால் வாலின் கீழ்பாகத்திலும் அரையின் மேல்பாகத்திலும் மேற்படி பிசுபிசுப்பான நீர் அடையாளமாகக் காணப்படும். அரையின் கீழ்பாகத்தில் மேற்படி காய்ந்த துண்டுகளும் காணப்படும். இன்னும் ஆராய்ந்து பார்க்கில் மேற்படி பிசுபிசுப்பான நீர் பின்கால்களில் துளித்துளிகளாய் விழுந்து காய்ந்துபோயிருப்பதும் காணலாம். பொலிப்பில்வருவதற்கு சற்று முன்னும் பொலிப்பிலிருக்கும்போது அடிக்கடியும் கொஞ்சம் கொஞ்சமாயும் மூத்திரம்விடும், பசுக்கள் பொலிப்பிலிருக்கும்போது அதன் அரை விம்மியும் சற்று வீங்கியும் அரையின் இரண்டுபக்கங்களும் எப்போதும் போல் நெருக்கமாய் மூடப்பட்டிராமல் சற்றுதிறந்திருப்பதாகவும் வெளிப்பக்கமாய் மடங்கியிருப்பதாகவும் தெரியும்.

கன்று போட்டபின் முதல் பொலிப்பெடுத்தல்.

பசுக்கள் கன்றுபோட்ட மூன்று மாதங்களுக்கப்பால் முதல் தரம் பொலிப்பில்வரும். ஆனால் வழக்கத்தில் பொதுவாக இது அவ்வளவு சரியான கணக்கென்றும் சொல்வதற்கில்லை. ஆகையால்தான் மேற்சொன்ன அடையாளங்களைக் கவனிக்கவேண்டியது முக்கியமாகிறது. திருஷ்டாந்தமாக ஒரு பசு கன்றுபோட்ட ஆறுமாதங்கள் வரையில் பொலிப்பில்வந்ததாக காணப்படாமலிருக்கலாம். இருந்தாலும் இது முதல் பொலிப்பாகவும் முன் கவனிக்கப்படாததால் இரண்டு அல்லது மூன்றாவது பொலிப்புகளாகவுமிருக்கலாம். மேற்சொன்ன அடையாளங்கள் ஆரம்பித்த 24 மணி நேரம்வரையில் மாடுகள் பொலிப்பிலிருக்கும். பசுக்களை அந்தகாலத்திற்குள் பொலியவிடவேண்டும்.

பசுக்கள் ஒருதரம் பொலிப்பில் வந்து மறுதரம், பொலிப்புக்குவரும் காலம்.

நல்ல மாடுகளாயிருக்கப்பட்டவை 21 நாட்களில் மறுபடியும் பொலிப்பில்வரும். இக்காலந்தவறி நினைத்த நேரங்களில பசுக்கள் பொலிப்பில் வந்தாலும் 4, 5 வாரங்கள் அல்லது 2, 3 மாதங்களில் ஒருதரம் பொலிப்பில் வந்தாலும் அநேகமாய் அம்மாடு சினைப்படாதென்பதற்கு ஓர் அறிகுறியாகும். காலந்தவறிவரும்போது அவ்வ மூன்று வாரங்களின் இரட்டிப்பு அல்லது மூன்று பங்கு காலமாகிய 6 அல்லது 9 வாரங்களின் இடையாவென்பதை கவனிக்கவேண்டும். ஏனெனில் அதற்கு முந்திய 3 வாரங்களில் எடுத்தபொலிப்பை கவனியாதிருக்திருக்கலாம்.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B. A., for The Agricultural Association, No. 5, Cutchery Road, Kumbakonam.